**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**OS.No.8/2021 - PW-1**

| | |
|---|---|
| Name | திரு.ஜெயகோஷ் |
| Father Name | திரு.ராமகிருஷ்ண ரெட்டி |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **23.03.2026.**

**1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

என் சகோதரர் 1–ம் பிரதிவாதிக்கு 1993–ம் ஆண்டு திருமணம் நடந்தது. எங்கள் கூட்டுக்குடும்ப வருமானத்திலிருந்து நான் தான் 1–ம் பிரதிவாதிக்கு திருமணம் செய்து வைத்தேன். 1–ம் பிரதிவாதியின் திருமணத்திற்கு பிறகு 25.05.2019–ம் தேதி எங்கள் தாயார் இறக்கும் வரை நாங்கள் ஒரே குடும்பமாக வசித்து வந்தோம். 1–ம் பிரதிவாதிக்கு திருமணம் முடிந்து ஒரிரு ஆண்டுகளிலேயே இராணிப்பேட்டைக்கு தனிக்குடும்பம் வந்துவிட்டார் என்றால் சரியல்ல. 1–ம் பிரதிவாதி 2000–ம் வருடத்தில் இராணிப்பேட்டையில் என் சகோதரி ஜெயசுதாவிற்கு சொந்தமான வீட்டில் குடி வந்தார். 2012–ம் வருடம் பிப்ரவரி மாதத்தில் 1–ம் பிரதிவாதி பெயரில் கேவிஆர் என்டர்பிரைசஸ் என்ற பெயரில் பெட்ரோல் பங்க் காவனூரில் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கான விண்ணப்பம் 1–ம் பிரதிவாதி பெயரில் நாங்கள் இருவரும் கலந்து தாக்கல் செய்தோம். 1–ம் பிரதிவாதி பெயரில் அந்த பெட்ரோல் பங்க் ஒதுக்கப்பட்டது. அந்த பெட்ரோல் பங்க் உள்ள இடம் 1–ம் பிரதிவாதியின் பெயரில் உள்ளது. பெட்ரோல் பங்க் ஆரம்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 1–ம் பிரதிவாதி தான் அதை நிர்வாகம் செய்து வருகிறார் என்றால் நானும், 1–ம் பிரதிவாதியும் சேர்ந்து நிர்வாகம் செய்து வந்தோம். அந்த பெட்ரோல் பங்கிலிருந்து வந்த வருமானம் 1–ம் பிரதிவாதியின் வருமான வரி கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இன்றைய தேதி வரை அந்த பெட்ரோல் பங்க் 1–ம் பிரதிவாதியின் பெயரிலும், நிர்வாகத்திலும் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்துகளில் என் சகோதரி 2–ம் பிரதிவாதிக்கும் பங்குள்ளது என்றால் சரிதான். என் சகோதரி 2–ம் பிரதிவாதிக்கு ஏற்கனவே 2 செட்டில்மெண்ட் ஆவணங்கள் மூலம் சொத்துகள் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்தினர் அனைவரும் கலந்து பேசி அந்த சொத்துகளை 2–ம் பிரதிவாதிக்கு கொடுத்தோம் என்றால் சரிதான். அதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. 1–ம் பிரதிவாதியின் பெயரில் தான் அரசாங்க ஒப்பந்த வேலைகள் வழங்கப்பட்டது என்றால் நான் தான் அவர் பெயரில் விண்ணப்பித்து பதிவு செய்தேன். 1–ம் பிரதிவாதி நிறைய அரசு ஒப்பந்த வேலைகள் எடுத்து செய்தார் என்றால் நானும் கூட்டாக சேர்ந்து

அந்த வேலைகளை செய்தோம். இன்றைய தேதி வரை 1–ம் பிரதிவாதியின் பெயரில் தான் அரசு ஒப்பந்தங்கள் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2012–ம் ஆண்டோடு அரசு ஒப்பந்த வேலைகளை நானும் செய்யவில்லை. 1–ம் பிரதிவாதியும் செய்யவில்லை. சமீபத்தில் கூட காவனூர் சாலையை ஒப்பந்த அடிப்படையில் 1–ம் பிரதிவாதி எடுத்து செய்து அதற்கு பணம் வராததால் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இராணிப்பேட்டையில் உள்ள வணிக வளாகத்தை 1987–ல் கூட்டுக் குடும்ப வருமானத்தில் நான் தான் கட்டினேன். வணிக வளாக வாடகையை நான் தான் ரசீதில் கையெழுத்து போட்டு வாங்கினேன் என்றால் நானும், 1–ம் பிரதிவாதியும் சேர்ந்து கையெழுத்து போட்டு வாடகையை வாங்கினோம். அந்த வணிக வளாகத்தை கட்டும் போது 1–ம் பிரதிவாதி சிறு வயதினராக இருந்தார். அந்த கட்டிடம் கட்டி 2 வருடங்கள் வரை சரியாக வாடகை வருமானம் இல்லை. தற்போது அந்த வணிக வளாகத்தில் உள்ள கட்டிடங்களுக்கான மாத வாடகை வருமானமாக ரூ.36,000/– வருகிறது. காவனூர் கிராமத்தில் கனரா வங்கி இயங்கி வந்த கட்டிடத்தை எங்கள் கூட்டுக்குடும்ப வருமானத்திலிருந்து கட்டினோம். அந்த கட்டிடத்திற்கு மாத வாடகையாக ரூ.10,800/– வங்கியிலிருந்து 1–ம் பிரதிவாதியின் பெயரில் கொடுக்கப்பட்டு வந்தது. அதை ஆட்சேபித்து நிறுத்திவிட்டேனா என்றால் என் அம்மா இறந்த பிறகு அந்த வாடகையை பொதுவில் வைக்க வேண்டும் என்று கேட்டேன். ஆட்சேபனை செய்யவில்லை. என் அம்மா இறக்கும் வரை எங்கள் கூட்டுக் குடும்ப சொத்துகளின் வருமானத்தை பொதுவாக வைத்து செலவு செய்து வந்தோம். நான் தான் அந்த வருமானத்தை நிர்வாகம் செய்து வந்தேன் என்றால் நானும், 1–ம் பிரதிவாதியும் சேர்ந்து நிர்வாகம் செய்தோம். அதற்கான வரவு செலவு கணக்கு உள்ளது. கனரா வங்கி கொடுக்க வேண்டிய வாடகை தொகை எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டதால் வங்கியிலேயே வைக்கப்பட்டுள்ளது. அந்த தொகை எவ்வளவு சேர்ந்துள்ளது என்று எனக்கு தெரியாது. ஏர்டெல் செல்போன் நிறுவனத்திற்கு எங்கள் இடத்தில் வாடகைக்கு செல்போன் கோபுரம் அமைக்க கொடுத்தோம் என்றால் சரிதான். நான் தான் வாடகை ஒப்பந்தம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும், என் அம்மா, என் சகோதர சகோதரிகள் 4 பேரும் சேர்ந்து ஒப்பந்தம் செய்தோம். அதற்கான வாடகை தொகை முதலில் மாதம் ரூ.4,000/–, கடைசியாக மாதம் ரூ.15,000/– வரை வாடகையாக என் பெயருக்கு வங்கி வரைவோலையாக வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த வாடகை ஒப்பந்தம் 2000–ம் ஆண்டில் முடிக்கப்பட்டுவிட்டது. வழக்கு அ பட்டியல் சொத்து என் தந்தையார், அவருடைய தாயார் பெயரில் அவருடைய தனிப்பட்ட வருமானத்தை கொண்டு கிரையம் பெற்றார். அந்த அ பட்டியல் சொத்தில் எனக்கும், 1, 2 பிரதிவாதிகளுக்கும் சம பங்கு உள்ளது என்றால் சரிதான். வழக்கு பி பட்டியல் சொத்துகள் என் தகப்பனார் அவருடைய வருமானத்தில் அவர் பெயரில் வாங்கிய சொத்துகள் என்றால் சரிதான். அந்த பி பட்டியல் சொத்தில் எனக்கும், 1, 2 பிரதிவாதிகளுக்கும் சம பங்கு உள்ளது என்றால் சரிதான். வழக்கு சி பட்டியல்

சொத்து என்னுடைய பெயரில் உள்ளது. அந்த சொத்துகள் எங்கள் கூட்டுக்குடும்ப வருமானத்தில் என் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சி பட்டியல் சொத்தில் எனக்கும், 1, 2 பிரதிவாதிகளுக்கும் சம பங்கு உள்ளது என்றால் சரிதான். வழக்கு இ பட்டியல் சொத்துகள் என்னுடைய பெயரிலும், 1–ம் பிரதிவாதி பெயரிலும் கூட்டாக உள்ளது. அந்த சொத்துகள் எங்கள் கூட்டுக்குடும்ப வருமானத்தில் என் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த இ பட்டியல் சொத்துகளில் எனக்கும், 1, 2 பிரதிவாதிகளுக்கும் சம பங்கு உள்ளது என்றால் சரிதான். வழக்கு டி பட்டியல் சொத்துகள் 1–ம் பிரதிவாதியின் பெயரில் மட்டுமே உள்ளது என்றால் சரிதான். அந்த டி பட்டியல் சொத்துகள் எங்கள் கூட்டுக்குடும்ப வருமானத்திலிருந்து 1–ம் பிரதிவாதியின் பெயரில் வாங்கப்பட்டது. வழக்கு டி பட்டியல் சொத்துகள் 1–ம் பிரதிவாதியின் தனிப்பட்ட வருமானத்தை கொண்டு வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. 1–ம் பிரதிவாதி எதிர்கோரிக்கை தாக்கல் செய்து வழக்கு 'எப்' பட்டியல் சொத்துகளும் கூட்டுக்குடும்ப வருமானத்திலிந்து என் பெயரில் வாங்கப்பட்டது என்றும், அதிலும் அனைவருக்கும் பாகம் உள்ளது என்றும் கேட்டுள்ளார் என்றால் அதை பற்றி தற்போது தான் தெரிந்து கொண்டேன். அந்த 'எப்' பட்டியல் சொத்துகளிலும் அனைவருக்கும் பங்கு உள்ளது என்றால் என் சகோதரிக்கு 1993–ம் ஆண்டு திருமணமாகிவிட்டதால் அவருக்கு பங்கு இல்லை. எனக்கும், 1–ம் பிரதிவாதிக்கு மட்டுமே பங்குள்ளது.

(1–ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

BALAKRISHNAN
Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.